தினமணி
www.dinamani.com

## அப்துல் கலாம் நினைவு தினம்

# அண்ணா பல்கலை. வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா



அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மரக்கன்று நட்டு நிகழ்ச்சியை தொடக்கிவைக்கிறார் டிஆர்டிஏ திட்ட இயக்குநர் கவிதா. உடன் மாவட்ட ரோட்டரி கவர்னர் ராஜசேகர் சீனிவாசன், சிறுதுளி அமைப்பின் நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன், அண்ணா பல்கலைக்கழக டீன் கே.ரவிச்சந்திரன் உள்ளிட்டோர்.

**கோவை, ஜூலை 27:** முன்னாள் குடியரசு தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் நினைவு தினத்தையொட்டி, கோவை அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் செவ்வாய்க்கிழமை மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

சிறுதுளி அமைப்பு, கோவை கேலக்ஸி ரோட்டரி சங்கம் ஆகியவற்றின் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ரோட்டரி கவர்னர் ராஜசேகர் சீனிவாசன், ரோட்டரி சங்கத் தலைவர் கற்பகம் முத்துராமன், செயலர் பழனியப்பன், திட்ட இயக்குநர் ஜே.பிரேம்குமார், சிறுதுளி அமைப்பின் நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன், டிஆர்டிஏ திட்ட இயக்குநர் கவிதா, அண்ணா பல்கலைக்கழக டீன் கே.ரவிச்சந்திரன், உதவிப் பேராசிரியர் ஏ.சிவகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழக வளாகத்தில் 5 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. பல்கலைக்கழக பணியாளர்கள், மாணவ-மாணவிகளின் பங்களிப்புடன் இதுவரை 85 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள சிறுதுளி அமைப்பு, விரைவில் இங்கு ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுவிடும் எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் 3 நிமிடங்களில் 5 ஆயிரம் மாணவ-மாணவிகள் மூலம் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நட்டு சாதனை படைக்கப்பட்ட இடத்தில் தற்போது தாவரங்கள், விலங்குகளுக்கு வளமான சூழல் உருவாகியிருப்பதாகவும் சிறுதுளி தெரிவித்துள்ளது.